# PRIMARY SCHOOL

# SEMESTRAL ASSESSMENT 1 - 2014

# HIGHER MOTHER TONGUE – TAMIL

# PRIMARY 6 HMT

Name: ______________________________ (     )

Class: Primary ________

Date: ____________

Duration of Paper:

More papers available at Testpapers free.com

THIS BOOKLET CONTAINS 8 PAGES.

DO NOT OPEN THIS BOOKLET UNTIL YOU ARE TOLD TO DO SO.

FOLLOW ALL INSTRUCTIONS CAREFULLY.

தொடக்கப்பள்ளி

பெயர் ; ______________________ தேதி : ______________

வகுப்பு : _______________ மதிப்பெண் ____________

<u>பிழை திருத்தம்</u>

ரோனால்ட் என்ற விஞ்ஞானி இங்கிலாந்தில் தன்னுடைய மருத்துவப் பட்டத்தை முடித்தார்.. அவருடைய மருத்துவத் 1. **திறமையில்** அறிந்த ஆங்கில அரசாங்கம், 2.**அவர்களை** இந்தியப் படைப் பகுதி ஒன்றிற்கு மருத்துவராக நியமித்தது. ரோனால்ட்டுக்குக் கிடைத்த பதவி அவருடைய தந்தைக்கு பெருமகிழ்ச்சியை 3.**அலித்தது.** ரோனால்ட் தம் உழைப்பால் ஏற்பட்ட சிறந்த நிலையை 4.**அறிந்த,** உயர்வடைய உழைத்தலே சிறந்த வழி என்பதை அனுபவத்தால் தெரிந்து கொண்டார். படையினருக்கு மருத்துவராக அமர்ந்த ரோனால்ட்டுக்குப், போர்க் காலத்தைத் தவிர மற்ற நாட்களில் ஓய்வு நேரம் அதிகம் 5. **கிடைத்தன.** அப்போது அவர் லத்தீன், கிரேக்கம், இத்தாலி, பிரெஞ்சு, ஜெர்மானிய ஆகிய மொழிகளைக் கற்றார்.

| |
|---|
| 1. |
| 2. |
| 3. |
| 4. |
| 5. |

வாக்கியங்களை முடித்தெழுதுதல்

பின்வரும் வாக்கியங்களைப் பொருத்தமான சொல்லை அல்லது சொற்களைக் கொண்டு முடித்துக் காட்டு. அவ்வாறு முடிக்கப்பெறும் வாக்கியங்கள் ஒவ்வொன்றும் அதற்கு முந்திய வாக்கியத்தின் கருத்தையே கொண்டிருக்க வேண்டும்.

6. சிறந்த மாணவர்களை உருவாக்க ஆசிரியர்கள் அரும்பாடுபடுகின்றனர்.

ஆசிரியர்கள் அரும்பாடுபட்டு ______________________________

______________________________________________

7. தூக்கப் பற்றாக்குறையினால் ஒருவன் தன் செயல்திறனை இழக்கிறான்.

ஒருவன் தன் செயல்திறனை இழப்பதற்கு ______________________

______________________________________________

8. இறுதியாண்டுத் தேர்வில் குகன் சிறப்பாகச் செய்ததை அறிந்த பெற்றோர் பெரும் மகிழ்ச்சி அடைந்தனர்.

தேர்வில் குகன் சிறப்பாகச் செய்தது அவனுடைய பெற்றோருக்கு ____________

______________________________________________

9. செய்தித்தாள் படிப்பதனால் ஏற்படக்கூடிய நன்மைகளை அனைவரும் உணர்ந்திருக்கின்றனர்.

செய்தித்தாள் படிப்பதனால் ஏற்படக்கூடிய நன்மைகளை உணராதவர்

______________________________________________

10. தொலைக்காட்சியில் இடம்பெறும் கேலிப்படங்களைக் குழந்தைகள் விரும்பிப் பார்க்கின்றனர்.

தொலைக்காட்சியில் இடம்பெறும் கேலிப்படங்கள் குழந்தைகளால் விரும்பி

______________________________________________

## வேற்றுமை

அடைப்பிற்குள் கொடுக்கப்பட்டுள்ள சொற்களுடன் பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்துக் கோடிட்ட இடங்களை நிரப்புக.

ஆற்றங்கரையில் அமர்ந்திருந்த ஞானி ஒருவரைக் காண ஓர் இளைஞன் வந்தான். அவன் 11.______________ (ஞானி), "ஐயா! நான் நீரின் மேல் நடந்தே இந்த ஆற்றைக் கடந்து விடுவேன்," என்று சொன்னான். ஞானி அவனிடம், "இந்த ஆற்றைப் பெற 12. ______________ (உன்) எவ்வளவு காலம் ஆயிற்று?" என்று கேட்டார்.

அதற்கு அந்த இளைஞன், "ஐந்து வருடங்கள் கடுமையான யோகப்

13. ______________ (பயிற்சிகள்) மேற்கொண்டேன். அதன் பிறகே இந்தச் சாதனையை 14. ______________ (என்) செய்ய முடிந்தது," என்றான். அதைக் கேட்ட ஞானி சிரித்துக் கொண்டே, "ஐந்து ஆண்டுகளை நீ வீணாக்கிவிட்டாய். பத்துக் காசு கொடுத்தால் படகுக்காரன் உன்னை 15. ______________ (அக்கரை) போய்ச் சேர்த்து விடுவானே! நீ உன் வாழ்நாளில் ஐந்து ஆண்டுகளை நீரின்மேல் நடந்து செலவழித்ததைவிட ஐந்து நாள்களில் நீந்தக் கற்றுக்கொண்டிருக்கலாமே! என்று கூறினார்.

## ‘ஆ’பிரிவு

## B4 கருத்தறிதல் (8 மதிப்பெண்கள்)

பின்வரும் பகுதியில் Q14 முதல் Q17 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு ஏற்ற வாக்கியங்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்குரிய மிகப் பொருத்தமான வாக்கியத்தைத் தெரிவு செய்து அதன் எண்ணைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள கட்டத்தில் எழுது.

முன்னொரு காலத்தில் தாய்லாந்து நாட்டில் தோட்டக்காரனும் அவன் மனைவியும் இருந்தார்கள். அவன் மிகவும் நல்லவன். அவனைப் போலவே (Q14)________________ .

ஒருநாள் இரவு அவர்கள் வீட்டிற்குத் துறவி ஒருவர் வந்தார். அவர் (Q15)____________________ கேட்டார். துறவி தங்கள் வீட்டிற்கு வந்ததைத் தோட்டக்காரனும் அவன் மனைவியும் பெருமையாகக் கருதினர். அதனால், அவர்கள் (Q16)____________________ உணவு படைத்தனர். பிறகு, துறவி தங்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அவர்கள் செய்து கொடுத்தார்கள்.

கணவனும் மனைவியும் மறுநாள் துறவிக்கு என்ன (Q17)____________________. அவர்கள் தங்கள் வீட்டில் இருக்கும் ஒரு பெட்டைக்கோழியை வெட்டிக் கறி சமைக்க முடிவு செய்தனர்.

(1) பரிசு வழங்கலாம் என்று கலந்துரையாடினர்

(2) கறி சமைத்து விருந்து அளிக்கலாம் என்று யோசித்தனர்

(3) எனக்கு ஏதேனும் உதவி செய்யுங்கள் என்று

(4) அவளும் நன்கு வரவேற்று உபசரிப்பாள்

(5) தம் பசிக்கு உணவும் அன்றிரவு தங்குவதற்கு இடமும்

(6) அவன் மனைவியும் நல்ல பண்புடையவள்

(7) துறவியை வணங்கி, வரம் கேட்டு

(8) துறவியை அன்போடு வீட்டினுள் அழைத்துச்சென்று

Q 16) ______ Q 17) ______ Q 18) ______ Q 19) ______

சுயவிடைக் கருத்தறிதல்

பின்வரும் பத்திரிக்கைச் செய்தியைக் கருத்தூன்றிப் படித்து, அதனடியில் காணும் வினாக்களுக்கு உன் சொந்த நடையில் விடை தருக.

வடகிழக்கு இங்கிலாந்தில் உள்ள பள்ளியொன்றில் திடீரென்று புகுந்த முகமூடி அணிந்த ஆடவன் ஒருவன் மாணவி ஒருத்தியை கத்தியால் குத்திக் கொன்றதோடு மேலும் இருவரை காயம் படுத்தினான்.

ஹால் கார்த் பள்ளியின் ஒரு வகுப்பறையில் சுமார் 25 மாணவர்கள் கணக்குப் பாடம் படித்துக்கொண்டிருக்கும் போது, வகுப்பறையில் திடீரென்று நுழைந்த அந்நபர், வகுப்பாசிரியரை கத்தியால் குத்தி கொல்லப் போவதாக மிரட்டினான்.

குழந்தைகள் அனைவரையும் வரிசையாக நிற்கும்படி அவன் உத்தரவிட்டுள்ளதாகத் தோன்றியது. அதன் பிறகு என்ன நடந்தது என்று தெரிய வில்லை. 13 வயதான அச்சிறுமி பல கத்திக் குத்துகளுக்கு ஆளாகி மாண்டு கிடந்தாள், என்று காவலர் டோரிஸ் ஜோன்ஸ் செய்தியாளர்களிடம் குறிப்பிட்டார்.

அந்நபரை இரண்டு காவலர்கள் வளைத்துப் பிடித்து காவல் நிலையத்தில் ஒப்படைத்தனர். 29 வயதான அந்நபர் இன்று நீதிமன்றத்தில் நிறுத்தப்படலாம் என்று நம்பப்படுகிறது.

இத்தாக்குதல் ஏன் மேற்கொள்ளப்பட்டது என்பது இன்னும் மர்மமாக உள்ளது. தாக்குதல் நடத்தியவனுக்கு மாணவர்களில் யாரையாவது தெரியுமா என்பதையும் உடனடியாக அறிந்து கொள்ள முடியவில்லை. இத்தாக்குதலுக்கு உள்நோக்கம் எதுவும் இருக்குமா என்பது இப்போது வரை தெரியவில்லை என்று ஜோன்ஸ் குறிப்பிட்டார்.

அந்த 13 வயதான சிறுமியின் உடலில் பல கத்திக் குத்துக் காயங்கள் காணப்பட்டன. மற்றொரு மாணவி இரண்டு தடவை கத்தியால் குத்தப்பட்டாள். இன்னொரு சிறுவனுக்கு லேசான காயம் ஏற்பட்டது. அந்நபரிடமிருந்து இரண்டு கத்திகள் கைப்பற்றப்பட்டன.

இதனிடையே, கொலை நிகழ்ந்த சுமார் ஆறு மணி நேரத்திற்குப் பிறகு, ஸ்பீடன் ஜேம்ஸ் வில்கின்ஸன் (வயது 29) என்ற அந்நபர் இங்குள்ள நீதிமன்றம் ஒன்றில் குற்றம் சாட்டப்பட்டார். கொலை செய்யப்பட்ட மாணவியின் பெயர் நிக்கி கொன்ரோய் எனவும் நீதி மன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

20. கொலை செய்யப்பட்ட மாணவியின் பள்ளி எங்கு அமைந்துள்ளது? (3)

______________________________________________

______________________________________________

21. முகமூடி ஆடவன் எப்போது வகுப்பறைக்குள் நுழைந்தான் ? (3)

______________________________________________

______________________________________________

22. முகமூடி ஆடவன் வகுப்புக்குள் இருந்தவர்களை எவ்வாறு மிரட்டினான்? (4)

______________________________________________

______________________________________________

23. முகமூடி ஆடவன் எவ்வாறு பிடிபட்டான்? (3)

______________________________________________

______________________________________________

24. சிறுமி மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் ஏன் மர்மமாக உள்ளது? (4)

______________________________________________

______________________________________________

______________________________________________

25. முகமூடி ஆடவன் எப்போது நீதிமன்றத்தில் குற்றம் சாட்டப்பட்டான்? (3)

______________________________________________

______________________________________________

______________________________________________

26. பொருள் எழுது.

பின்வரும் சொற்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியில் இடம் பெற்றுள்ளன. அவற்றின் பொருளை உணர்த்தும் வேறொரு சொல்லைக் கோட்டில் எழுது.

அ. மிரட்டினான் : ______________

ஆ. உத்தரவிட்டுள்ளதாக : ______________

ரோனால்ட் என்ற விஞ்ஞானி ...

1) திறமையை 2) அவரை 3) அளித்தது 4) அறிந்து
5) கிடைத்தது

6) சிறந்த மாணவர்களை உருவாக்குகின்றனர்.
7) தூக்கப் பற்றாக்குறையே காரணமாகும்.
8) பெரும் மகிழ்ச்சியை அளித்தது.
9) எவரும் இல்லை.
10) பார்க்கப்படுகின்றன.

11) ஞானியிடம்
12) உனக்கு
13) பயிற்சிகளை
14) என்னால்
15) அக்கரைக்கு

16) 6 17) 5 18) 8 19) 2

20) கொலை செய்யப்பட்ட மாணவியின் ஹால் கார்த் பள்ளி வடகிழக்கு இங்கிலாந்தில் அமைந்துள்ளது.

21) வகுப்பறையில் சுமார் 25 மாணவர்கள் கணக்குப் பாடம் படித்துக் கொண்டிருக்கும் போது முகமூடி ஆடவன் வகுப்பறையில் நுழைந்தான்.

22) முகமூடி ஆடவன் வகுப்பில் இருந்த ஆசிரியரைக் கத்தியால் குத்திக் கொல்லப் போவதாக மிரட்டியதோடு மாணவர்கள் அனைவரையும் வரிசையாக நிற்கும்படி உத்தரவிட்டான்.

23) முகமூடி ஆடவன் இரண்டு காவலர்களால் வளைத்துப் பிடிக்கப்பட்டு காவல் நிலையத்துக்கு அனுப்பப்பட்டான்.

24) தாக்குதல் நடத்தியவனுக்குப் பள்ளிக் குழந்தைகளில் யாரையாவது தெரியுமா என்பதை அறிந்து கொள்ள முடியவில்லை. மேலும் இந்தத் தாக்குதலுக்கு உள்நோக்கம் எதுவும் இருக்குமா என்பதும் தெரியவில்லை. அதனால் சிறுமி மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் மர்மமாக உள்ளது.

25) கொலை நிகழ்ந்த சுமார் ஆறு மணி நேரத்திற்குப் பின் , முகமூடி ஆடவன் நீதிமன்றத்தில் குற்றம் சாட்டப்பட்டான்.

26) அ. பயமுறுத்தினான் ஆ.. கட்டளையிட்டுள்ளதாக